அமரர், முன்னாள் நகரபிதா

## ஸ்ரீமான் ச. க. விஜயரத்தினம்

# நினைவுப்பேருரை



பிரதம விருந்தினர்

**உயர்திரு. நாகநாதன் செல்வகுமாரன்**

பீடாதிபதி

சட்டபீடம், கொழும்பு பல்கலைக்கழகம்,

உறுப்பினர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

## விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி

நீர்கொழும்பு

07-12-2005

நீர்கொழும்பு
விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி

# ஸ்தாபகர் தினவிழாவும் நினைவுப் பேருரையும்

இடம்
கல்லூரி பிரதான மண்டபம்

காலம்
**07.12.2005 மு.ப. 10.00 மணி**

தலைமை
திரு. ந. கணேசலிங்கம்
(அதிபர். நீர்/வி.இ.ம.க.)

நினைவுப் பேருரை
**"அடிப்படை மனித உரிமைகள்"**
நிகழ்த்துபவர் பிரதம அதிதி
உயர்திரு நாகநாதன் செல்வகுமாரன்
பீடாதிபதி,
சட்டபீடம் - கொழும்புப் பல்கலைக்கழகம்
உறுப்பினர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு)

கௌரவ அதிதி
உயர்திரு M.A.N.D .விஜயவர்த்தனா
(வலயக் கல்விப்பணிப்பாளர், நீர்கொழும்பு)


விசேட அதிதிகள்
உயர்திரு ஜெயம் விஜயரத்தினம்
(காப்பாளர் விஜயரத்தினம் இ.ம.க.)

திருமதி யோகேஸ்வரி விஜயரத்தினம்

அமரர்

# திரு. ச. க. விஜயரத்தினம்

அவர்கள்



தோற்றம்
15 * 12 * 1893

மறைவு
17 * 01 * 1955

ஸ்தாபகர்

நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி

**விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியின்**
**காப்பாளர் திரு. ஜெயம் விஜயரத்தினம் அவர்களின்**

# வாழ்த்துச் செய்தி

நீர்கொழும்பு வாழ் சைவப் பெருமக்களின் தமிழையும், சைவநெறியையும், கலாசாரத்தையும் பேண வேண்டுமென்ற நோக்கில் 1932ல் அக்காலமுனைந்த தீர்க்க தரிசிகளால் இந்து வாலிபர் சங்கம் தாபிக்கப்பட்டது. ஆரம்பகாலம் முதல் இன்று வரை பல சமய சமுதாயப்பணிகளில் பங்காற்றி இன்று இந்த இளைஞர் மன்றம் என்ற பெயருடன் பெரும் செயலாற்றி வருகிறது.

அக்காலம் இந்து வாலிபர் சங்கத்தின் தலைவராக இருந்த முன்னாள் நகர பிதா திருவாளர் ச. க. விஜயரத்தினம் அவர்களின் மனதில் தமிழ்ச் சிறார்களுக்கு சிறந்த கல்வி அறிவையும், சமய அறிவையும் புகட்ட வேண்டுமென்று 1954ல் அவரின் சிந்தனையில் உருவானதுதான் விவேகானந்த வித்தியாலயம். அவ்வித்தியாலயம் இன்று சிறந்த கல்லூரியாக நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியாக திகழ்கின்றது.

அன்று அன்னாரால் வித்திடப்பட்ட கல்லூரி கடந்த ஆண்டில் தனது பொன் விழாவைக் கொண்டாடி 51 வது வயதில் காலடி எடுத்து வைத்துள்ளது. கடந்த காலங்களில் கல்லூரியின் வளர்ச்சியில் மாணவர்களின் கல்வி வளர்ச்சி பெற்றதுடன் நல்ல பல பெறுபேறுகளையும் பெற்றுக் கொடுத்துள்ளது. மேலும் போட்டிகள், விளையாட்டுகள் என்பவற்றிலும் பல சாதனைகளைப் புரிந்து கம்பஹா மாவட்டத்திலேயே ஒரே ஒரு இந்துப் பாடசாலையாக மிளிர்வதையிட்டு பெருமையடைகிறேன்.

நீர்கொழும்பு தமிழ் மக்களின் கனவை நினைவாக்கிய முன்னாள் நகரபிதாவும் எனது தந்தையுமாகிய திருவாளர் ச. க. விஜயரத்தினம் அவர்களை நினைவு கூர்ந்து நினைவுப் பேருரையை ஏற்பாடு செய்துள்ளமைக்கு நன்றி கூறுவதுடன், தொடர்ந்தும் அதன் வளர்ச்சி ஆலமரத்தின் விழுதுபோல வியாபித்து தன் முன்னேற்றப் பாதையில் செல்ல வேண்டுமென்று எல்லாம் வல்ல ஸ்ரீ சித்தி விநாயகப் பெருமானை வேண்டுகிறேன்.

**உயர்திரு. ஜெயம் விஜயரத்தினம்**
**காப்பாளர்**
**நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி**

# பதிப்புரை

நீர்கொழும்பு மாநகரசபை முன்னாள் மேயரும் நீர்கொழும்பு சித்தி விநாயகர் திருப்பணி சபை, இந்து இளைஞர் மன்ற முன்னாள் தலைவரும், விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி ஸ்தாபகரும், மற்றும் பல ஸ்தாபனங்களில் பணிகளை மேற்கொண்ட அறிஞர் அமரர் ச. க. விஜயரத்தினம் அவர்களது 50வது நினைவையொட்டி நினைவுப் பேருரை ஒன்றையும் ஸ்தாபக தின விழாவையும் நடாத்துவதில் மகிழ்ச்சியடைகின்றோம்.

அன்னாரின் நினைவுப் பேருரையைக் கொழும்புப் பல்கலைக்கழக சட்ட பீடாதிபதி, உயர்திரு. நாகநாதன் செல்வகுமாரன் அவர்கள் "அடிப்படை மனித உரிமைகள்" என்ற தலைப்பில் நிகழ்த்தும் உரை நூல் வடிவில் இடம் பெறுவதையிட்டு மிக்க மகிழ்ச்சியடைகின்றேன். 07-10-1954ல் அமரர் ச. க. விஜயரத்தினம் ஐயா அவர்களின் தீர்க்கதரிசனத்தால் இன்று எமது பாடசாலை அறிவுப் பசியை தீர்த்து இலங்கையில் முன்னணிப் பாடசாலைகளில் ஒன்றாகத் திகழ்கின்றது. அன்னார் இப்பாடசாலையை ஸ்தாபித்தது மட்டுமின்றி அரசினரால் பொறுப்பேற்கும்வரை ஆசிரியர் சம்பளம், தளபாடங்கள், ஏனைய செலவுகளையும் பொறுப்பேற்றுக் கொண்டார். அன்னாரின் மறைவின் பின் திருமதி சிவபாக்கியம் விஜயரத்தினம் அம்மையார் பணிகளைப் பொறுப்பேற்றார். அதன் பின்னர் தற்போது அவரது மகன் திரு. ஜெயம் விஜயரத்தினம் அவர்கள் பாடசாலையின் காப்பாளராகக் கடமை புரிகின்றார். அவர் பாடசாலையின் வளர்ச்சிக்குத் தன்னை அர்ப்பணிப்புடன் ஈடுபடுத்தி செயலாற்றி வருகின்றார். அவர்கள் இந்நூலுக்கு ஆசியுரை வழங்கியதையிட்டு நன்றி தெரிவிப்பதோடு இவ்வாறான பேருரையை வருடந்தோறும் நிகழ்த்துவதற்கும் பாடசாலைக்கு தொடர்ந்து ஆதரவளிப்பதற்கும் விஜயரத்தினம் குடும்பத்தினருக்கும் குறிப்பாக அவரது மகன் ஜெயம் விஜயரத்தினம், துணைவியார் திருமதி யோகேஸ்வரி ஜெயம் விஜயரத்தினம் அவர்களுக்கும் பாடசாலையின் சார்பில் மிக்க நன்றியினைத் தெரிவித்து கொள்கின்றோம்.

**ந. கணேசலிங்கம்**
**அதிபர்**
**விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரி**
**நீர்கொழும்பு**

# நினைவுப்பேருரை

**உயர்திரு. நாகநாதன் செல்வகுமாரன்**
பீடாதிபதி,
சட்டபீடம், கொழும்புப் பல்கலைக்கழகம்
உறுப்பினர் இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழு

# அடிப்படை உரிமைகளும் இலங்கையின் அனுபவமும்

நீர்கொழும்பு விஜயரத்தினம் இந்து மத்திய கல்லூரியின் ஸ்தாபகரும் அளப்பரிய சமூகசேவையாளரும் கல்வி மற்றும் இந்து சமய வளர்ச்சிக்கு விலைமதிக்க முடியாப் பங்காற்றியவரும் மனித உரிமைகளின் மேம்பாட்டாளரும் நீர்கொழும்பின் முன்னைநாள் நகரபிதாவுமான சிவபதமடைந்த உயர்திரு ச. க. விஜயரத்தினம் அவர்களின் நினைவுப் பேருரையை ஆற்றுவதற்கு எனக்குச் சந்தர்ப்பங் கிடைத்ததையிட்டு மிக்க மகிழ்ச்சி யடைகிறேன். பல்லாயிரத்துக்கு மேலான மாணவ மணிகளுக்குக் கல்வியெனும் விலைமதிப்பிலாச் செல்வத்தை வழங்கிவரும் இந்தக் கல்லூரி ஐம்பது அகவைகளைக் கடந்த ஆண்டு கண்டிருக்கின்றதெனின் இவற்றுக்கெல்லாம் காரணகர்த்தா அந்தச் சுயநலங்கருதா புண்ணியஸ்தர் திருவாளர் விஜயரத்தினம் ஆவார். அவரது தொலைநோக்கு இன்று நீர்கொழும்பு வாழ் தமிழ்பேசும் மக்களுக்கு ஓர் அளப்பரிய வரப்பிரசாதம் எனின் மிகையாகாது.

மேல் மாகாணத்தின் கம்பஹ மாவட்டத்திலுள்ள ஒரேயொரு இந்துக் கல்லூரி இதுதான் என்பது இன்னும் மெருகூட்டுகிறது. சீரிய பண்பும் தயாள சிந்தனையும் பிறர்க்குதவும் மனப்பக்குவமும் கொண்டுள்ள மாமனிதர்களைக் காண்தல் அரிது. அவர்களின் எண்ணிக்கை மிகவும் குறுகியதாகிச் செல்வது அண்மைக்காலங்களின் அவலநிலையாகும். இத்தகைய நிலையில், தம் மழலைச் செல்வங்களுக்கு உயிரினும் மேலான கல்விச் செல்வத்தை வழங்குவதற்கும் அவர்களை நற்பிரசைகளாக வளர்ப்பதற்கு உதவுவதற்கும் பாரிய பங்களிக்கின்ற நிறுவனமான கல்விக் கூடத்தைத் தன்னலங்கருதாது தாபித்த மேதகு விஜயரத்தினம் அவர்களை ஆண்டு தோறும் ஞாபகங்கொள்தல் அவருக்கு ஆற்றும் நன்றியறிதல் மாத்திரமல்ல அவர் ஆற்றிய பணிகள் நன்மைகள் என்பவற்றை மற்றவர்கள் அறிந்து அவர் வழி செயற்படுவதற்கான சந்தர்ப்பத்தை உருவாக்குவதாகவும் விளங்கும். இத்தகைய தொரு உற்சவத்தில் பங்குபற்றுவதற்கும் இத்தகையதோர் மனிதருக்கு கௌரவம் செலுத்துவதற்கும் எனக்குக் கிடைத்த சந்தர்ப்பத்தை மிக்கதொரு பாக்கியமாகக் கருதுவதுடன் அந்தச் சந்தர்ப்பத்தை ஏற்படுத்தித் தந்த கல்லூரி அதிபர் மதிப்புமிகு திரு ந. கணேசலிங்கம் அவர்களுக்கு இத் தருணத்தில் எனது மனப்பூர்வமான நன்றியையும் கடப்பாட்டையும் தெரிவித்துக் கொள்வதில் அகம் மகிழ்கிறது. இன்று நான் ஆற்ற விளையும் உரையின் கருப்பொருள் அடிப்படை உரிமைகளும் இலங்கையின் அனுபவமும் பற்றியதாகும்.

# அடிப்படை உரிமைகள்

அடிப்படை உரிமைகள் என்ற சொற்றொடர் பாவிக்கப்படும் போது அது இரு விதமான கருத்துக்களில் பயன்படுத்தப்படுவதைக் காணலாம். பொதுவான பாவனையில் மக்கள் தங்களுக்கு உரித்தான - மனித பிறப்புக் காரணமாக - உரிமைகள் எனக் கருதப்படுபவை அடிப்படை உரிமைகளாகக் கொள்ளப்படுகின்றன. இதனை விடுத்து, அரசியலமைப்புச் சட்டத்தினை உணர்ந்தவர்கள் - சட்டத்தில் தொழில் புரிகின்றவர்கள் மற்றும் ஈடுபாடு உள்ளவர்கள் - அடிப்படை உரிமைகள் எனும் போது சமகாலத்தில் இந்த நாட்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பால் அதன் மூன்றாம் அத்தியாயத்தில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளை உணர்ந்து கொள்வர். அதாவது அரசியலமைப்பில் இடப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகளையும் சுதந்திரங்களையும் அடிப்படை உரிமைகள் எனக் கணித்துச் செயற்படுவர். இந்த இரண்டாவது அர்த்தத்தில் இச் சொற்றொடர் இங்கு பயன்படுத்தப்படுவதுடன் இது இன்று பலராலும் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது என்பதுடன் அது நேர்த்தியான பாவனையுங்கூட.

அடிப்படை உரிமைக்கும் சாதாரண உரிமைக்கும் இடையிலான வேறுபாடுகள் என்னவென்பது உணரப்பட வேண்டிய ஒன்றாகும். சாதாரண உரிமை என்பது நாட்டின் சாதாரண சட்டத்தால் அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமையைக் குறித்து நிற்கும். உதாரணமாக, காணி ஒன்றைக் கொள்வனவு செய்துள்ளவர் அந்தக் காணி மீது கொண்டுள்ள உரிமை - அதனைக் குத்தகைக்குக் கொடுக்க அல்லது சட்டபூர்வமான பாவனைக்கு உட்படுத்தவுள்ள உரிமை - அவருக்குக் காணிச் சட்டத்தால் வழங்கப்பட்டுள்ள சாதாரண சட்ட உரிமையாகும். இது சாதாரண எழுதப்பட்ட சட்டத்தால் அல்லது எழுதப்படாத சட்டத்தால் வழங்கப்பட்ட உரிமையாக விருக்கலாம். ஆனால் அது அடிப்படை உரிமையாகக் கருதப்பட மாட்டாது. மறுபுறத்தில், நாட்டின் அடிப்படைச் சட்டமாகக் கருதப்படுகின்ற அரசியலமைப்பால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டு ஒருவருக்கு உரித்தாக்கப்பட்டுள்ள - உதாரணமாகச் சமத்துவத்துக்கான - உரிமையானது அடிப்படை உரிமையாகக் கருதப்படுகின்றது. இத்தகைய உரிமைகள் அடிப்படை உரிமையாகக் கருதப்படுவதற்கான காரணம் என்னவெனில் இவை நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பால் அடிப்படை உரிமைகள் என நாமம் சூட்டப்பட்டு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளமையாலாகும்.

இது தொடர்பில் கவனிக்கப்பட வேண்டிய இன்னோர் அம்சமும் அத்தியாவசியமானதாகும். சாதாரண சட்டங்களால் உருவாக்கப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளின் உத்தரவாத நிலைப்பாடு ஸ்திரமானதாகக் கொள்ள முடியாது. அவை எவ்வாறு சட்டவாக்கசபையின் - பாராளுமன்றத்தின் - சாதாரண பெரும்பான்மையைப் பெற்றுச் சட்ட அந்தஸ்தைப் பெற்றனவோ அதே போல அச்சட்டமன்றத்தின் சாதாரண பெரும்பான்மையின் பலத்தைப் பெற்று நீக்கப்படுவதற்கும் இலகுவானதாக விளங்கும். அடிப்படைச் சட்டத்தால் - நாட்டின் அரசியலமைப்பால் - அடிப்படை உரிமைகள் என அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்ட உரிமைகளானவை, மறுபுறத்தில், சாதாரணமான சட்டவாக்கசபையின் நடவடிக்கையால் நீக்கப்படுவதற்கோ மாற்றப்படுவதற்கோ அல்லது திருத்தப்படுவதற்கோ இயலாது. பாராளுமன்ற உறுப்பினர்களின் மொத்த எண்ணிக்கையானோரின் மூன்றில் இரண்டு பெரும்பான்மையோர் அத்தகைய நடவடிக்கைக்குச் சார்பாக வாக்களித்துச் செயற்படின் மட்டும் அவை மாற்றப்படலாம், திருத்தப்படலாம் அல்லது நீக்கப்படலாம். இவற்றுள் சில அடிப்படை உரிமைகள் மாற்றப்பட, திருத்தப்பட அல்லது நீக்கப்பட வேண்டுமாயின் பாராளுமன்ற அங்கத்தவர்களின் மூன்றில் இரண்டு பெரும்பான்மை மாத்திரம் போதாது. அதற்கு மேலாக மக்கள் தீர்ப்பில் மக்களின் அங்கீகாரமும் பெறப்படல் அவசியமாகும். அத்தகைய உரிமைகளின் முக்கியத்துவம் காரணமாக அவற்றில் தலையிடுவதற்கு சட்டசபைக்கு ஏக உரிமை கிடையாது. அவற்றுக்கு மக்களின் அங்கீகாரத்தையும் பெறல் வேண்டும். இந்த விடயம் அடிப்படை உரிமைகளின் உறுதித்தன்மையையும் சாதாரண சட்ட உரிமைகளின் நெகிழ்வுத் தன்மையையும் தெளிவாக்குகின்றது.

இது தவிர, அடிப்படை உரிமைகள் மனித உரிமைகளிலிருந்து பிரித்து அறியப்படல் வேண்டும். எவ்வாறு மற்றும் எந்த நோக்கத்தக்காக அடிப்படை உரிமைகள் மனித உரிமைகளிலிருந்து வேறுபடுகின்றன? இந்த வேறுபாடு நேர்த்தியானதா? இதில் உண்மையுண்டா அல்லது இது வெறும் மாயையா என்ற வினாக்கள் மனத்தில் எழச் செய்கின்றன. இவற்றுக்கான விடையைக் கண்ணுறுவதற்கு முன்பாக மனித உரிமைகள் என்றால் என்ன? அவை ஏன் அங்கீகரிக்கப்படுகின்றன? அவை எவ்வாறு உத்தரவாதஞ் செய்யப்படுகின்றன? போன்ற இன்னோரன்ன விடயங்களை ஆராய்ந்தறிதல் சிறப்பானதாகும்.

## மனித உரிமைகள்

மனித சமூகத்தின் உறுப்பினராக உதயமாகும் ஒவ்வொருவரும் உயிர் வாழ்வதற்கான உரிமையை உள்ளார்ந்த ரீதியாகக் கொண்டுள்ளார். மனிதராகப்

பிறக்கின்ற ஒவ்வொருவரும் அவரது உயிர் ஏனையோராலோ அல்லது அவராலோ பறிக்கப்படாதிருப்பதற்கான உரித்தைக் கொண்டுள்ளார். மண்ணில் பிறக்கும், வாழும் ஒவ்வொருவரின் பிரதான கரிசனை உயிர் வாழ்வதும், கௌரவத்துடன் உயிர்வாழ்வதுமாகும். இந்த இரு தலையாய கரிசனைகளே சகல மனித உரிமைகள் சுதந்திரங்களின் அடித்தளங்களாக விளங்குகின்றன. மனித உரிமைகளாக இன்று நாம் இனங்கண்டு கொள்கின்ற பல உரிமைகளும் இந்த இரண்டு அக்கறைகளையும் எய்துவதற்கான உரிமைகளாக இனங்கண்டு கொள்ளப்படலாம்.

உலக மகாயுத்தங்களின் காரணமாக இழக்கப்பட்ட பல கோடி மனித உயிர்கள் உலக நாடுகளின் மனச்சாட்சியை உலுக்கியது. உரிமைகள் சுதந்திரங்களின் மீறல் அல்லது மறுப்பே இத்தகைய அனர்த்தங்களுக்கு வழிகோல்கின்றன என்ற உணர்வு பல நாடுகள் மத்தியில் உருவாகிற்று. எனவே, மனித உரிமைகள் மதிக்கப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும் மற்றும் மேம்படுத்தப்பட வேண்டும் என்ற தீர்க்கமான முடிவுக்கு அவர்களை இந்த மகாயுத்தங்களும் அவற்றின் பின்னணிகளும் விளைவுகளும் கொண்டுவரச் செய்தன.

இதற்கு மேலாக, மனித சமூகத்தின் அங்கத்தினர்களாக விளங்கும் ஒவ்வொருவருக்கும் இத்தகைய கரிசனைகளைப் பாதுகாக்கும் தேவை, அவரவர்கள் எங்கு வசிக்கின்றார்கள், எந்தத் தேசியத்தைச் சார்ந்தவர்கள், எந்த மதத்தைப் பின்பற்றுகின்றவர், எந்த இனத்துவத்தைச் சார்ந்துள்ளவர், எந்த மொழியைப் பேசுகின்றவர், எந்த ஆசியல் சிந்தனைகளைச் பின்பற்றுகின்றவர், எந்த சமூக கலாசாரப் பண்புகளை கடைப்பிடிக்கின்றவர் போன்ற காரணிகளால் பாதிக்கப்படாது, ஏற்புடையதாகும் என்பதையும் ஏற்றுக் கொண்டனர். இதுவே மனித உரிமைகளின் அனைத்துலகத் தன்மைக்கு வழிகோலியது. மனித சமூகத்தின் உறுப்பினர்கள் யாவரும் இன, மத, மொழி, பால், அரசியல் அபிப்பிராயம், புவியியல் இருப்பிடம் போன்ற இன்னோரன்ன ஏதுக்களின் அடிப்படையில் மனிதர் ஒருவருக்கு மேற்சொன்ன இரு கரிசனைகளையும் உத்தரவாதஞ் செய்வதற்கு, அவற்றை செயற்படுத்துவதற்கு அத்தியாவசியமான உரிமைகளையும் சுதந்திரங்களையும் அரசாங்கங்கள் மறுத்தலாகாது என்பதைச் சருவதேசச் சமூகம் ஏற்றுக் கொண்டது. இதன் காரணமாக பொது மானிடத்துவமே மனித உரிமைகளை நியாயபூர்வப்படுத்தும் அம்சமாகவும் அனைத்துலகத் தன்மையை வழங்குவதாகவும் விளங்குகிறது.

கடந்த நூற்றாண்டில் சில நாட்டு ஆட்சியாளர்களின் நடவடிக்கைகளால் மனித குலத்துக்கு ஏற்பட்ட கோடானுகோடி உயிரிழப்புகள், அனர்த்தங்களின் பிரதிபலனாக, மக்களின் அரசாங்கங்களே மக்களின் அக்கறைகளுக்கும்

நலன்களுக்கும் பாதகமான செயற்பாட்டாளர்களாக விளங்கியமை உணரப்பட்டது. இதன் காரணமாக பன்னாட்டாளர் மத்தியில் மக்களின் உரிமைகள் பேணப்பட வேண்டும், பாதுகாக்கப்பட வேண்டும் என்ற எண்ணம் கொண்டவர்கள் மத்தியில், இவற்றை உத்தரவாதஞ் செய்வதற்கு வேண்டிய நடவடிக்கைகள் எடுக்கவேண்டுமென்ற எண்ணம் உருவாகியது. அதன் ஒரு விளைவே ஐக்கிய நாடுகள் ஸ்தாபனத்தின் தோற்றமாகும். அதைத் தொடர்ந்து உருவாகிய அனைத்துல மனித உரிமைகள் பிரகடனம், மற்றும் பல்வேறுபட்ட அனைத்துலக மட்டத்திலான மற்றும் பிராந்திய மட்டங்களிலான மனித உரிமைகள் தொடர்பான பிரகடனங்கள், கட்டுறுத்துக்கள், சமவாயங்கள், உடன்படிக்கைகள் என்பன அந்தக் குறிக்கோளை எய்துவதற்கான செயற்பாடுகளாகும். இத்தகைய ஆவணங்களின் கீழ் உருவாகிச் செயற்பட்டுவரும் நிறுவனங்களும் அதனையே அடைய எத்தனிக்கின்றன.

மனித உரிமைகள் மதிக்கப்படுவதன் மற்றும் பாதுகாக்கப்படுவதன் அத்தியாவசியத்தை நியாயபூர்வப் படுத்துவதற்குப் பல்வேறுபட்ட கருத்தேற்பு ரீதியான அடிப்படைகள், சித்தாந்தங்கள் காட்டப்பட்டு விவாதிக்கப்பட்டு வருவது இன்றும் காணப்படக் கூடிய ஒரு விடயமாகும். எது எவ்வாறிருப்பினும், மனித உரிமைகளும் சுதந்திரங்களும் அரசாங்கங்களையும் அவற்றின் செயற்பாடுகளையும் கட்டுப்படுத்தும் அம்சங்களாகும் என்பது இன்று பன்னாட்டு மட்டத்தில் ஏற்றுக் கொள்ளப்பட்டு விட்டதொரு விடயமாகும். எனின், எத்துணையளவு மதிப்பளிக்கப்பட வேண்டும் என்பதில் அபிப்பிராய பேதங்கள் இருப்பதும் மறுப்பதற்கில்லை. அரசியல் விஞ்ஞானச் சிந்தனையாளர்களால், குறிப்பாக உலொக் என்பவரால் விளக்கப்பட்ட சமூக ஒப்பந்தக் கோட்பாட்டின் அடிப்படையில் அரசாங்கத்துக்கும் மக்களுக்குமிடையிலான ஒப்பந்த அடிப்படையில் மனித உரிமைகள் மீறப்படமாட்டாது என்பது உள்ளார்ந்திருக்கின்றது.

ஒரு நாட்டின் அரசாங்கமானது அந்நாட்டு மக்களின் மேம்பாட்டுக்காக, அபிவிருத்திக்காக செயலாற்ற எதிர்பார்க்கப்படுகின்றது. நாட்டில் சட்டமும் ஒழுங்கும் பேணப்படவேண்டும் என்பதற்காகவும் மக்கள் அமைதியாக வாழ்வதற்கும், அவர்களின் வளர்ச்சிக்காகவும், மேம்பாட்டுக்காகவும், பாதுகாப்புக்காகவும் அரசாங்கங்கள் செயற்பட வேண்டும் என்பதற்காகவும் அரசாங்கங்களுக்குச் சகல தத்துவங்களையும் வல்லமையையும், தங்கள் மீது ஆதிக்கம் செலுத்துவதற்கான வல்லமை உள்ளீடாக, வழங்குகின்ற முறைமைக்கு அனுமதிக்கின்றனர். ஆகவே, அரசாங்கங்கள் பலம் வாய்ந்தவையாகவும் அதீத வல்லமைபெற்றவையாகவும் பரிணமித்தன. தத்தமது நாட்டுக்குள் எதனையும் செய்யக்கூடிய தத்துவம் பெற்றனவாக விளங்கின.

எனின், இத்தகைய தத்துவங்கள் வழங்கப்படுகையில் - அதாவது மக்களால் தமது அரசாங்கங்களுக்கு வழங்கப்படுகையில் - அவை மனித உரிமைகளாக அங்கீகரிக்கப்பட்டுள்ள உரிமைகளையும் சுதந்திரங்களையும் பாதிக்கின்ற வகையில் செயற்பட அந்த அரசாங்கங்களை அனுமதிப்பதாக அமையாது என்ற நிபந்தனைக் கமைவாகவே வழங்கப்பட்டன.

ஆக, மக்களின் நலனுக்காக, நாட்டின் மேம்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் அமைதிக்குமாகச் செயற்பட, மக்களினால் பாரிய அதிகாரங்கள் அரசாங்கங்களுக்கு வழங்கப்படுகையில், அத்தகைய அதிகாரங்களானவை மனித உரிமைகளை மீறாத வண்ணம், அவற்றை மேம்படுத்துகின்ற வண்ணம், பிரயோகிக்கப்படுவதை வேண்டி நிற்கிறது. அந்த அதிகார வழங்கல் முற்றானதல்ல. மட்டுப்பாடானதே! அதாவது மனித உரிமைகளை மீறுகின்ற வகையில், அவற்றை மேம்படுத்தாத வகையில், அவற்றுக்குக் குந்தகம் விளைக்கின்ற வகையில் அரசாங்கத்தின் அதிகாரம் பயன்படுத்தப்படலாகாது.

எனவே, மனித உரிமைகளென அங்கீகரிக்கப்பட்டு ஏற்றுக்கொள்ளப்பட்டவை, அரசாங்கங்களின் தத்துவங்கள்மீது அவற்றின் செயற்பாடுகள்மீது மறைமுகமாக இடப்பட்டுள்ள வரைபாடுகளாக உணரப்படல் வேண்டும். ஏனெனில் மக்களின் நலனுக்காகச் செயற்படும் அரசாங்கங்கள் மக்களின் உள்ளார்ந்தவையாகக் கருதப்படும் உரிமைகளை மீறிச் செயற்படலாகா என எதிர்பார்க்கப்படுகின்றன. இதனை வேறுவிதமாகக் கூறுவதாயின் மனித உரிமைகளை அங்கீகரிப்பதானது அரச இயந்திரங்களாக - மனிதநேய உணர்வற்றுச் செயற்படும் - அரசாங்கங்களை மனிதத்துவப்படுத்தும், மனிதநேய உணர்வுகளை அவைபால் வளப்படுத்தும், நடவடிக்கையாக செயற்பாடாக கண்ணுறலாம். அரசாங்கங்களின் செயற்பாட்டில் மனித நேயத்தை உள்வாங்கும் பணியை மனித உரிமைகளின் அங்கீகாரம் உத்தரவாதஞ் செய்ய எத்தனிக்கின்றது.

ஆக, மனித உரிமைகள் என்பன மனிதனுக்கும் அரசாங்கத்துக்கும் இடையிலான சட்டத் தொடர்பான உறவை எடுத்துக்காட்டுகின்றன. அரசாங்கங்கள் தத்தமது மக்களை நடாத்துகையில் எத்தகைய மதிப்பும் மரியாதையும் கௌரவமும் கொடுத்து, எத்தகைய மட்டுப்பாடுகளுக்கமைவாக, செயற்பட வேண்டும் என்பதைக் காட்டி நிற்கின்றன. இவ்வாறான போதும் சகல நாடுகளும் அனைத்துலக மட்டத்தில் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள சகல மனித உரிமைகளையும் தத்தமது நாட்டு மக்களுக்கு உத்தரவாதஞ் செய்வனவோ அன்றேல் உறுதி செய்வனவோ அல்ல.

வரலாற்றுப் பின்னணிகள், சமூக பொருளாதார கலாசார மற்றும் அரசியல் சித்தாந்தங்கள் என்பவற்றால் உந்தப்பட்டு ஒட்டு மொத்த அனைத்துலக மனித

உரிமைகளுள் சிலவற்றைத் தேர்ந்தெடுத்து அவற்றை தத்தமது நாட்டு மக்களுக்கு ஏற்புடைத்தாக்கி உத்தரவாதஞ்செய்து நடைமுறைப்படுத்தும் பாங்கு நாடுகள் பலவற்றில் காணப்படுகின்றது. இதனால் தான் சகல மனித உரிமைகளும் அடிப்படை உரிமைகளாக தனிப்பட்ட நாடுகளின் அரசியலமைப்புக்களில் ஏற்று உள்வாங்கப்படுவது பொதுவாக நடைபெறுவதில்லை. இந்த அடிப்படையில் பல நாடுகள் தமது நாட்டு மக்களுக்கு உரித்தானதென ஏற்றுக்கொண்டு அவற்றுக்கு மதிப்பளிக்கும் கடப்பாட்டை ஏற்றுக்கொண்டு அவற்றை நாட்டின் அடிப்படைச் சட்டமான அரசியலமைப்பில் பொதித்து, பாதுகாப்பும் உத்தரவாதமும் வழங்குகையில் அத்தகைய உரிமைகளை அடிப்படை உரிமைகள் என நாமம் சூட்டி அழைப்பர். ஆகவே, அடிப்படை உரிமைகள் என இலங்கை அரசியலமைப்பில் இனங்கண்டு கொள்ளப்பட்டுள்ளவை யாவும் மனித உரிமைகளே. ஆனால், இலங்கையின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பு சகல மனித உரிமைகளையும் இலங்கை மக்களின் அடிப்படை உரிமைகளாக ஏற்றுக் கொள்ளவில்லை என்பதும் உண்மையே.

## அடிப்படை உரிமைகளும் இலங்கையின் அனுபவங்களும்

இனங்களுக்கிடையில் மதங்களுக்கிடையில் ஓரங்காட்டப்படலாகாது என்ற உத்தரவாதத்தை அரசியலமைப்பில் உள்ளடக்கியதாக 1948ஆம் ஆண்டு ஆரம்பித்த சுதந்திர இலங்கை அதனது முதலாவது குடியரசு அரசியலமைப்பின் வாயிலாக சற்று விரிவான அடிப்படை உரிமைகளையும் சுதந்திரங்களையும் உள்வாங்கிக் கொண்டமையை 1972 ஆம் ஆண்டு கண்ணுற்றது. ஆயின், எதிர்காலச் சட்டவாக்க நடவடிக்கை தொடர்பில் அரசியலமைப்பின் ஏற்பாடுகளுடன் இயைபாந்தன்மை வேண்டி நிற்கப்பட்ட போதும், நிருவாக மற்றும் நிறைவேற்று நடவடிக்கைகள் இந்த ஏற்பாடுகளுக்கு முரணானதாக விருக்கும் வேளையில் அவற்றுக் கெதிராக நிவாரணம் பெறுவதற்கான வெளிப்படையான பாதுகாப்பு எதுவும் அரசியலமைப்பில் ஏற்படுத்தப்படாதிருந்தமை பாரிய குறைபாடாக் கருதப்பட்டது. அது மாத்திரமன்றி, இது வெறும் வார்த்தை ஜாலமே, வெட்டிப் பேச்சே அன்றி நடைமுறையில், உரிமைகளும் சுதந்திரங்களும் மீறப்படும் போது காத்திரமான குறைதீர்ப்பை வழங்குவதற்கான வெளிப்படையான ஏற்பாடுகளைக் கொண்டிராத காரணத்தால், பிரயோசனமற்ற தெனக் குறைகூறப்பட்டது.

மக்களால் நேரடியாகத் தேர்ந்தெடுக்கப்படுகின்றதும் நிறைவேற்று அதிகாரங்கொண்டதுமான சனாதிபதி முறைமையை அறிமுகப்படுத்திய 1978 ஆம் ஆண்டின் இரண்டாவது குடியரசு அரசியலமைப்பானது, அதன் மூன்றாம் அத்தியாயத்தில் அடிப்படை உரிமைகள் என்ற தலைப்பின்கீழ் பல மனித உரிமைகளை அடிப்படை உரிமைகளாக அங்கீகரித்திருக்கின்றது. பிரதானமாக குடியியல், அரசியல் உரிமைகளை உள்வாங்கியதாக விளங்கும் இந்த அரசியலமைப்பு அந்த உரிமைகள் சுதந்திரங்கள் சிலவற்றை இலங்கைப் பிரசைகளுக்கு மட்டும் உத்தரவாதஞ் செய்கையில் மற்றையவை மனிதர்களுக்கு உரியதானவையாக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளன. மற்றும் தனிமனித நோக்கில் உரிமைகள் உத்தரவாதஞ் செய்யப்பட்டுள்ள தன்மையைக் காணலாம். குழு உரிமைகள் என்ற அடிப்படையில் ஏற்பாடுகள் வரையப்படவில்லை என்பதும் அவதானிக்கப்படற்பாலது. சில உரிமைகளை அனுபவிக்கின்ற போது மற்றவர்களுடன் சேர்ந்து அனுபவிக்கலாம் என ஏற்பாடு செய்யப்பட்டிருப்பினும் அது வரையப்பட்ட பாங்கு தனிமனித உரிமையை அங்கீகரிக்கின்ற நோக்கிலேயே உருவாக்கப்பட்டுள்ளது.

சிந்தனைச் சுதந்திரம், மனச்சாட்சியைப் பின்பற்றும் சுதந்திரம் மற்றும் மதச் சுதந்திரம் என்பனவும், சித்திரவதைக்கு எதிரான மற்றும் கொடூரமான, மனிதாபிமானமற்ற, கீழ்தரமான நடாத்துகைக்கு அல்லது தண்டனைக்கு எதிரான சுதந்திரமும் அரசியலமைப்பின் 10ஆம் 11ஆம் உறுப்புரைகளால் ஆட்களுக்கு உத்தரவாதஞ் செய்யப்பட்டுள்ளன. இவற்றின் அனுபவிப்பில் எத்தகைய மட்டுப்பாடும் இடக்கூடிய அதிகாரம் பாராளுமன்றத்துக்கு வழங்கப்படவில்லை. அவ்வாறு ஏதும் மட்டுப்பாடு இடப்பட வேண்டின் மக்களின் அங்கீகாரம் பெறப்படல் வேண்டும் என ஏற்பாடு செய்யப்பட்டிருக்கின்றது.

சமத்துவத்துக்கான உரிமையை உறுப்புரை 12 உறுதிப்படுத்துகிறது. சட்டத்தின் முன் யாவரும் சமன் மற்றும் அவர்கள் சட்டத்தின் சமமான பாதுகாப்புக்கு உரித்துடையவர்கள் என்பது முதலாம் உபஉறுப்புரையால் சகல மக்களுக்கும் உறுதிப்படுத்தப்படுகையில், இரண்டாம் உபஉறுப்புரை பிரசைகள் எவரும் இனம், மதம், மொழி, சாதி, பால், அரசியல் அபிப்பிராயம், பிறந்த இடம் என்ற காரணங்களடிப்படையில் ஓரங்காட்டப்படலுக்கு ஆளாகக் கூடாதென ஏற்பாடு செய்யப்படுகிறது.

பதின்மூன்றாம் உறுப்புரை வாயிலாக, பிரசையொருவர் எதேச்சாதிகாரமாக கைது செய்யப்படுவதற்கு, தடுத்து வைக்கப்படுவதற்கு எதிரான சுதந்திரத்தைக் கொண்டுள்ளார் என்பது உத்தரவாதஞ் செய்யப்படுகின்றது. இங்கு எந்தவொரு

பிரசையும் நாட்டின் சட்டவேற்பாட்டுக்கு அமைவாக வன்றி கைது செய்யப்படவோ தடுத்து வைக்கப்படவோ முடியாது என்று ஏற்பாடு செய்யினும், நாட்டின் சட்டம் விதிக்கின்ற விதிமுறை மனித உரிமைகளுக்கு முரணானதாக விருப்பின் இவை காத்திரமான சுதந்திரத்தை உறுதிப்படுத்துகின்றதெனக் கூறமுடியாது.

அரசியலமைப்பின் 14ஆம் உறுப்புரையானது ஒரு தொகையான சுதந்திரங்களை இலங்கைப் பிரசைகளுக்கு உரித்தாக்குகின்றது. இதன்படி, பேச்சு மற்றும் கருத்துத் தெரிவித்தற்கான சுதந்திரம், அமைதியாக ஒன்றுகூடுவதற்கும் ஒருங்கு சேர்வதற்குமான சுதந்திரம், தொழிற்சங்கத்தை அமைப்பதற்கும் அதிற் சேர்வதற்குமான சுதந்திரம், சமயத்தை அல்லது நம்பிக்கையை தானாக அல்லது மற்றையோருடன் சேர்ந்து வழிபாடு, அனுஷ்டானம், பழக்கம் அல்லது போதனை மூலம் வெளிப்படுத்துவதற்கான சுதந்திரம், கலாசாரத்தை அனுபவிப்பதற்கும் மேம்படுத்துவதற்கும் மற்றும் மொழியைப் பயன்படுத்துவதற்குமான சுதந்திரம், சட்டபூர்வமான வியாபாரத்தில் அல்லது தொழிலில் ஈடுபடுவதற்கான சுதந்திரம், தான் விரும்பிய எந்த இடத்திலும் வாழ்வதற்கான சுதந்திரம், இலங்கையில் எங்கும் சென்றுவரவுள்ள சுதந்திரம் மற்றும் இலங்கைக்கு மீள்வருவதற்கான சுதந்திரம் என்பன பிரசைகளுக்கு வழங்கப்பட்டுள்ளன.

இங்கு கூறப்பட்ட உரிமைகள், 10ஆம் 11 ஆம் உறுப்புரைகளில் கூறப்பட்ட உரிமைகள் தவிர, யாவும் அரசியலமைப்பின் 15ஆம் உறுப்புரையில் கூறப்பட்ட வரைபாடுகளுக்கு அமைவாக மட்டுப்படுத்தப்படலாம். இத்தகைய மட்டுப்பாடுகள் சட்டத்தால் அல்லது சட்டத்தின்கீழ் உருவாக்கப்பட்டிருக்க வேண்டும். அவை எந்தக் காரணிகளின் நிமித்தம் இடப்படலாம் என்பவை 15ஆம் உறுப்புரையில் தரப்பட்டுள்ளன. இதன் பிரகாரம் மற்றவர்களின் உரிமைகள் சுதந்திரங்கள் பாதுகாக்கப்படல் காரணமாக, நீதிமன்றத்தின் மரியாதையைக் காப்பதற்காக, பாராளுமன்றத்தின் சிறப்புரிமைகளைப் பாதுகாத்துக் கொள்வதற்காக, நாட்டின் இன, மதச் சமூக நிலையை உருவாக்குவதற்காக, நாட்டின் தேசிய நலன், பாதுகாப்பு, சுகாதாரம் போன்ற இன்னோரன்ன காரணிகளுக்காக இவை மட்டுப்படுத்தப்படலாம்.

இனி, அரசியலமைப்பின் பிரகாரம் எவ்வாறான உத்தரவாதம் இந்த உரிமைகளும் சுதந்திரங்களும் அனுபவிக்கப்படுவதற்காக ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதென்பதை அவதானித்தல் அவசியமாகும். அரசியலமைப்பின் 4ஆம் உறுப்புரையின் படி அரசாங்கத்தின் சகல துறைகளும் அரசியலமைப்பால் ஏற்று அங்கீகரிக்கப்பட்டுள்ள அடிப்படை உரிமைகளை மதித்து, மேம்படுத்தும்

வண்ணம் செயற்படத் தேவைப்படுத்தப்பட்டுள்ளன. அத்துடன், அவை அந்த உரிமைகளைச் சிறுகப்பண்ணவோ அல்லது அவற்றுக்கு முரணாகவோ செயற்படலாகாது எனவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது. இவற்றுக்கு மேலாக அரசியலமைப்பின் 17ஆம் மற்றும் 126ஆம் உறுப்புரைகளின் பிரகாரம் ஒருவரின் அடிப்படை உரிமையானது நிறைவேற்று அல்லது நிர்வாக நடவடிக்கையால் மீறப்படும் போது அல்லது மீறப்படும் அபாயம் இருக்கும் போது அவற்றை விசாரணை செய்து குறைதீர்ப்பு வழங்குவதற்கான புறநீங்கலான தத்துவம் உயர்நீதிமன்றத்துக்கு வழங்கப்பட்டுள்ளது. உயர்நீதிமன்றமானது இத்தகைய சந்தர்ப்பங்களில் ஒப்புரவும் நீதியானதுமான குறைதீர்ப்பை வழங்குவதற்குப் பரந்த வல்லமை வழங்கப்பட்டிருக்கின்றது.

முன்னைய அரசியலமைப்புக்களுடன் நோக்கும்போது, குறிப்பாக முதலாவது குடியரசு அரசியலமைப்புடன் ஒப்பிடுகையில், தற்போதைய அரசியலமைப்பு விரிவாக பல உரிமைகளையும் சுதந்திரங்களையும் எடுத்தியம்பியுள்ளது என்பது சாலச் சிறப்பான ஓரம்சமாகும். மேலும் அத்தகைய உரிமைகள் அரசின் நிருவாக மற்றும் நிறைவேற்று நடவடிக்கைகளால் மீறப்படும் போது அல்லது அத்தகைய அச்சம் நிலவுகின்ற போது அதற்கெதிராக குறைதீர்ப்புப் பெறுவதற்காகப் பிரத்தியேக நிவாரணம் கோரும் நடைமுறையையும் அரசியலமைப்பு வெளிப்படையாகவே ஏற்படுத்தியுள்ளது என்பது மேலும் மெருகூட்டுகிறது.

இவ்வாறான நிறைகளை அடிப்படை உரிமைகள் தொடர்பான விடயத்தில் இந்த அரசியலமைப்பு தன்னகத்தே கொண்டிருந்த போதும், இங்கு குறைகள் இல்லாமலுமில்லை. அடிப்படை உரிமைகள் மீறப்பட்டு அல்லது மீறப்படப்போகும் அபாயம் ஏற்பட்டு ஒரு மாத காலத்துள் உயர்நீதிமன்றம் செல்ல வேண்டும் என்பது மிகவும் குறுகிய கால அவகாசமாகும். உயர்நீதிமன்றம் தனது பொருள்கோடல் தத்துவத்தைப் பாவித்து இதனால் ஏற்படுகின்ற அசௌகரியங்களைக் குறைத்திருக்கலாம். ஆயின் அவ்வாறு நிகழவில்லை. மிகவும் குறைந்ததான சந்தர்ப்பங்கள் தவிர மற்றைய வேளைகளில் ஒரு மாதகாலக் கெடு மிகவும் கெட்டியாக நிலைநாட்டப்படுதல் உரிமைகளின் மேம்பாட்டுக்கு உகந்ததான வொன்றல்ல.

அடுத்து, குறைதீர்ப்பு உயர்நீதிமன்றத்தினால் மாத்திரம் வழங்கப்படலாம் எனவும் மற்றைய நீதிமன்றங்களில் இது கோரமுடியாதென்பதும் இன்னோர் இடைஞ்சலாகும். உயர்நீதிமன்றம் கொழும்பு மாநகரில் தான் இயங்குகின்றது. தூர இடங்களிலிருந்து வருபவர்களுக்கு இது மிகவும் கடினமான ஓர் அனுபவமாகும். இந்தக் கஷ்டத்தினாலேயே பலர் தமக்கு இழைக்கப்பட்ட உரிமை மீறல்களுக்கு எதிராக நடவடிக்கை எடுக்க விரும்பிய போதும் இந்தத்

தூரத்தைக் கருத்தில் கொண்டு எடுக்காது விட்டுள்ள சந்தர்ப்பங்கள் அதிகமாகும். பதிலாக மற்றைய நீதிமன்றங்களிலும் இந்த வழக்கைத் தொடுக்கலாம், குறைந்தது மாவட்ட ரீதியிலுள்ள மேல் நீதிமன்றங்களில் இவற்றைத் தாக்கல் செய்யலாமென ஏற்பாடாயிருந்தால் மிகவும் சாதகமானதாக விருந்திருக்கும்.

யாருடைய உரிமை மீறப்பட்டதோ அவர் அல்லது அவரால் அதிகாரமளிக்கப்பட்ட சட்டத்தரணி தான் உரிமை மீறலுக்காக வழக்குத் தாக்கல் செய்யலாம் என்று அரசியலமைப்பில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ள தேவைப்பாடானது நலிந்த நிலையிலுள்ளவர்களுக்கு - பண ரீதியாக, படிப்பறிவு ரீதியாக இதர ரீதியாக பின் தங்கிய நிலையிலுள்ளவர்களுக்கு - மற்றவர்கள் துணைவருவதைத் தவிர்க்கின்றது. அண்டை நாடான இந்தியாவில் பொதுமக்கள் நலன்கருதி வழக்குத் தாக்கல் செய்யப்படுவதை உயர்நீதிமன்றம் ஊக்குவிக்கின்ற பாங்கு இங்குள்ள நிலைக்கு நேர் மாறானதாக விருக்கின்றது.

இது தவிர, நிறைவேற்று மற்றும் நிருவாக நடவடிக்கை யொன்று அடிப்படை உரிமையை மீறின்தான் அதற் கெதிராகக் குறைதீர்ப்புப் பெறலாமென ஏற்பாடு செய்து மற்றைய அரச நடவடிக்கைகளான சட்டவாக்க மற்றும் நீதிமுறை நடவடிக்கைகளை விடுப்புச் செய்தமையும் அடிப்படை உரிமைகளுக்கு மதிப்பளித்து நடப்பதாகத் தென்படவில்லை. உண்மையில் ஏற்கனவே இருந்து வருகின்ற சட்டங்கள் - எழுதப்பட்ட மற்றும் எழுதப்படாதவை- அவை அத்தியாயம் மூன்றிலுள்ள அடிப்படை உரிமைகளை மீறினுஞ் சரி இல்லாவிடினுஞ் சரி தொடர்ந்தும் செயற்பாட்டில் இருக்கும் என்ற ஏற்பாடு அடிப்படை உரிமைகளின் பயன்பாட்டுக்கும் அதற்கான மதிப்புக்கும் வழங்கப்பட்ட சாட்டையடி எனக் கூறலாம். இத்தகைய தோர் ஏற்பாடானது வேறு எந்த நாட்டிலும் இருப்பதாக காணமுடியாது.

அத்துடன் பொது மக்களுக்காக அரசினால் நடாத்தப்பட்டுவந்த வழங்கல் சேவைகள் தற்காலத்தில் தனியார் மயப்படுத்தப்பட்டு வருகின்ற சந்தர்ப்பத்தில் அவ்வாறு தனியார் மயக் கம்பனிகளால் அல்லது நிறுவனங்களால் இழைக்கப்படும் அடிப்படை உரிமை மீறல்களைத் தட்டிக்கேட்பார் அற்றுப் போவதற்கான வாய்ப்பு இருக்கின்றது. அண்மைக்கால உயர்நீதிமன்றத்தின் போக்கும் இத்தகைய தோர் அணுகுமுறையையே எடுத்துக்காட்டுவது அடிப்படை உரிமைகளைப் பேணி மேம்படுத்துவதற்கான ஒரு முயற்சியாகத் தென்படவில்லை.

ஒரு நாட்டில் அடிப்படை மனித உரிமைகள் மேம்படுத்தப்படுவதற்கும் பாதுகாக்கப்படுவதற்கும் சில அம்சங்கள் அத்தியாவசியமாகக் காணப்படல்

வேண்டும். பக்கஞ்சாரா நீதித்துறை, குறிப்பாக அரச நிறுவகங்களின் பால் ஈர்ப்புக் காட்டாத, நடுநிலையான நீதித்துறை அத்தியாவசியமாகும். இவ்வாறான தொரு நீதித்துறை இல்லையாயின் அடிப்படை உரிமைகள் மீறப்படுவதற்கும் மதிக்கப்படாதிருப்பதற்கும் போதிய வாய்ப்புகள் உருவாகும். அடுத்து, விழிப்புணர்வுள்ள மக்கள் அவசியமாகும். தத்தமது உரிமைகளை உணர்ந்தவர்களாகவும் அவற்றைப் பேணிப் பாதுகாக்கும் போக்குக் கொண்டவர்களாகவும் விளங்க வேண்டும். தங்களின் உரிமைகளை உணராத மக்களின் உரிமைகள் மீறப்படுகின்ற சந்தர்ப்பங்களைப் பல நாடுகளின் வரலாறு காட்டியுள்ளது. திறைமையும் பக்கஞ்சாரா பகிரங்க சேவையும் மனித உரிமைகளின் மேம்பாட்டுக்கும் பாதுகாப்புக்கும் அத்தியாவசிய மானவையாகும். இந்த விடயத்தில், பாடசாலைகள், கல்லூரிகள் மிகவும் காத்திரமான பங்களிப்பைச் செய்யக் கூடியதாக வுள்ளன எனின் யாரும் மறுப்புக் கூற முடியாது.

இவற்றுக்கு மேலாக மனித உரிமைகளை மதிக்கின்ற பாங்கு மக்கள் மத்தியில் வளர்க்கப்படல் அவசியமாகும். மற்றையவர்களின் உரிமைகளையும் சுதந்திரங்களையும் எப்போது நாம் மதிக்க, கௌரவிக்க பழகுகின்றோமோ அப்போது மனித உரிமைகளின் மீறல்கள் மிகவாகக் குறைந்து செல்லும். இதற்கு ஒவ்வொரு குடிமக்களும் அடிப்படை மனித உரிமைகளை படித்துக் கொண்டால் போதாது, அவற்றை மனத்தில் உள்வாங்கி தமது வாழ்க்கை நடைமுறையின் பாகமாக ஆக்கல் வேண்டும். உதட்டளவில் மனித உரிமைகளை மதித்து நடைமுறையில் அதனை மிதித்துச் செயற்படும் பாங்கு நிலவும்வரை மனித உரிமைகளின் மீறல்கள் தொடரத்தான் செய்யும். இதற்கு நமது கலாசாரமும் பண்பாடும் ஏதுக்களாக விளங்குகின்றன. நாமிளைக்கும் மனித உரிமை மீறல்கள் பலவற்றுக்கு நாம் காட்டும் நியாயபூர்வம் எமது கலாசாரம், பண்பாடு என்பனவாகும். மனித உரிமைகளை மீறுகின்ற, ஒடுக்குகின்ற கலாசாரத்துக்குப் பதிலாக மனித உரிமைகளை மதிக்கின்ற கலாசார மொன்றை ஆரம்பிப்போம். கலாசாரங்களும் பண்பாடுகளும் நம்மால் உருவானவையே. அது நமக்கு நமது நலன்களுக்குக் குந்தகமாக விருப்பின் நாம் அவற்றைக் களைவதில்லையா! அது போலத்தான் அடிப்படை மனித உரிமைகளை சிறுமைப் படுத்தும், மீறுகின்ற பண்பாட்டை களைந்தெறிவோம். மனித உரிமைகளை மதிக்கின்ற மானிடத்துவத்தை மேம்படுத்துகின்ற கலாசாரத்தை உருவாக்குதல் வேண்டும்.

கல்லூரிகள் பாடசாலைகளானவை சிறார்கள் மனத்தில் சிறந்த, நேர்த்தியான, தோதான எண்ணக்கருக்களை விதைப்பதற்கும் வளர்ப்பதற்குமான காத்திரமான களங்களாக அமைகின்றன. அவர்களை சரியான வழியில் இட்டுச் செல்லும்

பாரிய பொறுப்பு நாள்தோறும் கணிசமான நேரத்தை அவர்களுடன் போக்கிக்கொள்ளும் ஆசான்களாகிய கல்லூரி ஆசிரியர்களின் தோள்களைச் சாரும். இந்தக் கடமை மிகவும் மதிப்புக்குரியதும் பாரியதுமாகும். இந்தக் கடமையைச் செய்வதற்கு மற்றவர்களை மதிக்கும் மனப்பக்குவம் உரிமைகள் பற்றிய தெளிவு மாற்றுக் கருத்துக்கள் தொடர்பில் சகிப்புத்தன்மை மற்றும் பகிரங்க சேவையில் சொந்த விருப்பு வெறுப்புக்களுக்கு இடமளிக்காத புறவயத்தன்மை என்பன வளர்க்கப்படல் வேண்டும்.

தனியார் அல்லது சொந்த வாழ்க்கையானது விருப்பு வெறுப்புக்களால் ஆளப்பட்டு நடாத்தப்பட்டு வருவது என்பதை எவரும் மறுக்க முடியாது. குடும்பத் தலைவியோ தலைவனோ தமது குடும்ப உடனடி உறுப்பினர்களில் அளவுகடந்த அன்பு, பாசம், கருணை, முன்னுக்குக் கொண்டுவரும் அவா போன்ற இன்னோரன்ன தனிப்பட்ட விருப்பு வெறுப்புக்களால் உந்தப்பட்டு செயற்படுவார்கள் என்பது உலக நியதி. இவற்றை விடுத்து முற்றும் துறந்த முனிவர்களாக இல்லறத்தில் உள்ளவர்களை சமூகம் எதிர்பார்க்கவில்லை. எனின், இந்த பண்புகள் தனிப்பட்ட உறவுகள் தொடர்பில் கொண்டிருக்கலாம். குறிப்பாக பகிரங்க சேவையில் காலடி எடுத்து வைத்தவுடன் இவற்றுக்கு இடமளிக்காது சமத்துவக் கொள்கையை நேர்த்தியாகக் கடைப்பிடித்துச் செயற்படல் அவசியமாகும். பிரத்தியேக வாழ்க்கையில் பின்பற்றுகின்ற மனப்பாங்கை எமது பகிரங்க சேவை வாழ்க்கையில் பின்பற்றுவோமாயின், நாம் மற்றவர்களின் மனித உரிமைகளைப் புண்படுத்தப் போகின்றோம் என்பதில் ஐயமிருக்காது. இந்தப் பகிரங்க வாழ்க்கைக்கும் பிரத்தியேக வாழ்க்கைக்கும் இடையிலான வேறுபாட்டை உணரத் தவறுவதன் காரணமாகத்தான் பல்வேறுபட்ட உரிமை மீறல்கள் நாடுகளில், நிறுவனங்களில் உருவாகின்றன, தொடர்கின்றன என்பதைப் பலர் உணரத் தவறுகின்றனர். இந்த உண்மை உணரப்படின் மனித உரிமைகள் மீறப்படும் சந்தர்ப்பங்கள் மிகவாகக் குறையும் என்பதில் ஐயமில்லை.

நான் கல்வி கற்பிக்கும் பணியில் கடந்த முப்பது வருடங்களாக ஈடுபட்டு வருபவன் என்ற காரணத்தாலும் இது கல்லூரியாக விளங்குகின்ற காரணத்தாலும் எமது மாணவர்களை நாம் நடாத்தும் விதம் தொடர்பில் ஒரு சில அபிப்பிராயங்களைக் கூற விரும்புகிறேன். மாணவர் என்ற ரீதியில் ஒவ்வொரு மாணவரும் எம்மால் சமமாக நடாத்தப்பட வேண்டும் என எதிர்பார்க்க உரிமை உடையவராவர். அதாவது எத்தகைய பாராபட்சமுமின்றி ஓரங்காட்டப்படாமலும் ஆசிரியர்களால் நடாத்தப்பட வேண்டுமென அவர்கள் கோரிநிற்கலாம்.

ஏனெனில் இது அவர்களுக்கு இன்று அடிப்படை உரிமையொன்றாக இந்நாட்டின் அடிப்படைச் சட்டத்தால் உத்தரவாதஞ் செய்யப்பட்டுள்ளது. இது எம்மால் காட்டப்படும் தயவோ தாட்சண்யமோ ஆகாது. இது எம்மால் புரியப்பட வேண்டிய கடமையாகும், நிறைவேற்றப்பட வேண்டிய கடப்பாடாகும். மாணவர்களை நாம் நடாத்துகின்ற வேளையில் எமது விருப்பு வெறுப்புகள் அவர்களின் செயற்பாடு மற்றும் நடத்தை காரணமாக உருவாவது இயல்பாகும். ஆயின் இவற்றால் உந்தப்பட்டு சிலருடன் அன்பாகவும் ஏனையோருடன் கடுப்பாகவும் நாம் நடந்து கொள்ளல் சமத்துவக் கோட்பாட்டுக்குப் பாதகமானதாக அமையலாம்.

ஆம். சமமாக நடாத்தப்படுவதற்கான உரிமை என்பதால் அறியப்படுவது யாது? முதலாவதாக, இன மத மொழி பால் சாதி பிறப்பிடம் அரசியல் அபிப்பிராயம் போன்ற காரணிகளின் அடிப்படையில் எத்தகைய வேறுபாடும் காட்டி ஒருவர் நடாத்தப்படலாகாது. இக்காரணிகள் பிரித்துப் பார்க்கும் நோக்கங்களுக்காக அரசியலமைப்பால் தடைசெய்யப்பட்ட காரணிகளாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. இக்காரணிகள் மாத்திரமல்ல வேறு எந்த ஏதுவும் வேறுபாடு காட்டும் அடிப்படையாக அமையவேண்டுமானால் அந்தக் காரணிக்கும் செய்யப்படப் போகும் நடவடிக்கையால் எய்தப்பட எண்ணியுள்ள இலக்குக்கும் இடையில் நியாயமான தொடர்பு இருத்தல் அவசியமாகும். அத்தகைய நியாயமான காரணகாரியத் தொடர்பு காட்ட முடியாதிருக்கின்ற போது வேறுபாடு காட்டுவதற்கு அடிப்படையாக இருந்த காரணி சமத்துவக் கோட்பாட்டை முறியடிக்கின்ற ஓரம்சமாகக் கருதப்படும். உதாரணமாக ஒரு மாணவரின் பெற்றோர் சமூகத்தில் நல்ல பெயருடன் மேல்மட்டத்தில் இருக்கின்றனர் அல்லது பொருளாதார மேம்பாட்டை அடைந்தவர்களாக விளங்குகின்றனர் அன்றேல் அரசியல் செல்வாக்குப் பெற்றவர்களாகத் திகழ்கின்றனர் என்ற அடிப்படையில் கல்வி வழங்கப்படும் வேளையில் சாதாகமான நடாத்துகைக்கு ஆளாக்கப்பட்டும் இன்னோர் மாணவர் இவ்விடயங்களில் பெற்றோர் நலிந்த நிலையில் உள்ளனர் என்ற காரணத்துக்காக அத்தகைய சாதாகமான நடாத்துகைக்கு ஆட்படுத்தப்படாதும் இருப்பின் அங்கு பாரபட்சம் நிகழ்கின்றது. சமத்துவத்துக்கான உரிமை மீறப்படுகின்றது. காரணம் கல்வி புகட்டும் இலக்குக்கும் அல்லது நோக்கத்துக்கும் இந்த அம்சங்களுக்கு மிடையில் நியாயமான தொடர்பு காட்டப்பட முடியாது. நாம் ஒரு செயலைச் செய்ய முன்பாக அச் செயல் எந்த இலக்கை அடைவதற்காகச் செய்யப்படுகின்றதோ அந்த இலக்குடன் நியாயமான முறையில் தொடர்புடைய அடிப்படையில் நாம் ஆட்களை அல்லது விடயங்களைத் தேர்ந்தெடுத்துள்ளோமா எனச் சிந்திக்க வேண்டும். அதாவது நாம் செய்ய எத்தனிக்கும் விடயத்துக்கும்

தேர்ந்தெடுப்பதற்கு அடிப்படையாகப் பாவித்த காரணிக்கும் இடையில் தொடர்புள்ளதா என்பதையும் அத்தகைய தொடர்பு நியாயமான மனிதர் ஒருவரால் தோதான தொடர்பு என ஏற்றுக் கொள்ளப்படக் கூடியதா என்பதைச் சிந்திக்க வேண்டும். அவ்வாறு இல்லாத வேளையில் எமது நடவடிக்கைகள் சமத்துவக் கோட்பாட்டை மீறுவனவாக அமையும் அபாயம் உள்ளது.

## முடிவுரை

எனது இந்தச் சிற்றுரையில் அடிப்படை உரிமைகள் என்றால் யாவை? மனித உரிமைகள் யாவை? அவை இரண்டுக்குமிடையிலான வேறுபாடு என்ன? என்ற விடயங்களையும், இலங்கையில் கடந்த கால அரசியலமைப்புக்கள் அடிப்படை உரிமைகளுக்கு எத்தகைய இடத்தையும் மதிப்பையும் வழங்கின வென்பதையும், இன்றைய அரசியலமைப்பின் கீழ் அங்கீகரிக்கப்பட்டிருக்கின்ற அடிப்படை உரிமைகள் யாவை? என்பதையும் அவற்றின் குறை நிறைகள் பற்றியும் அடிப்படை மனித உரிமைகள் மேம்படுத்தப்பட மற்றும் பாதுகாக்கப்பட வேண்டின் நிலவவேண்டிய அம்சங்கள் பற்றியும் குறிப்பிட்டிருந்தேன். மேலாக கல்வி புகட்டும் கடமையில் ஈடுபட்டுக் கொண்டிருக்கும் நாங்கள் மனத்தில் செயலில் கொண்டிருக்க வேண்டிய பக்குவம், நிலைப்பாடு என்பவற்றையும் எடுத்துக் காட்டினேன். எனது இந்த உரையானது உங்கள் மனங்களில் அடிப்படை உரிமைகள் தொடர்பான சிந்தனைகளை தூண்டுவிக்குமாயின், நாம் செய்கின்ற பணிகள் செயல்கள் அவற்றுக்கு இசைவானதாக விளங்குகின்றனவா எனச் சிந்திக்க வைக்குமாயின் மகிழ்ச்சி அடைவேன்.

இறுதியாக, இந்த உரையை நிகழ்துவதற்கு எனக்கு வாய்ப்புத் தந்து மதிப்பளித்த கல்லூரி அதிபர் கனம் கணேசலிங்கம் அவர்களுக்கு இங்கு எனது உரையைப் பொறுமையாகச் செவிமடுத்த சகலருக்கும் என் அன்புகலந்த நன்றியையும் வணக்கத்தையும் தெரிவித்துக் கொள்ளவதில் மகிழ்ச்சியடைகிறேன்.

Printed by: Santhi Printers - Negombo.
Tel: 031-2222143